05.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெந்தயம் சாகுபடியில் கவனிக்க வேண்டியவை...



கீரையாகவும், விதைகளாகவும் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் அளிக்கும் வெந்தயம் சாகுபடியில் தகுந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்ற வேண்டும் என, தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

ரகங்கள்: கோ 1, பூசா எரிலி பன்சிங், லேம் தேர்வு 1, ராஜேந்திர கிராந்தி, கிஸார் சோனாலி, ஆர். எம்.டி 1, கோ 2 ஆகிய ரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை.

மண், தட்பவெப்பநிலை: நல்ல வடிகால் வசதியுள்ள கரிசல் அல்லது அங்ககச் சத்து மிகுந்த மணல் பாங்கான நிலத்தில் நன்கு வளரும். மிதமான தட்பவெப்பநிலை ஏற்றது.

பருவம்: ஜூன் - ஜூலை, அக்டோபர் - நவம்பர் மாதங்கள் வெந்தய சாகுபடிக்கு உகந்த பருவம்.

விதையளவு: ஹெக்டேருக்கு 12 கிலோ விதை போதும்.

விதை நேர்த்தி: ஹெக்டேருக்கு 12 கிலோ விதைக்கு 1.5 கிலோ அசோஸ்பைரில்லம், 50 கிராம் டிரைகோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைப்பு: நிலத்தை நன்கு உழுதபின்பு 3.5-க்கு 1.5 மீட்டர் அளவுள்ள பாத்திகளாகப் பிரித்து கொள்ள வேண்டும். விதைகளை 20-க்கு 15 செமீ இடைவெளியில் விதைக்க வேண்டும். பயிர் முளைக்கும் முன் 700 மிலி ப்ளுகுளோரலின் களைக்கொல்லியை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பதன் மூலம் களையைக் கட்டுப்படுத்தலாம்.

அடியுரம்: ஹெக்டேருக்கு 20 - 25 கிலோ தொழு உரத்தை கடைசி உழவின்போது இடவேண்டும். மேலும் 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 40 கிலோ சாம்பல் சத்து கொடுக்கும் உரங்களை இடவேண்டும்.

மேலுரம்: விதைத்த 30 நாள்கள் கழித்து மேலுரமாக ஹெக்டேருக்கு 20 கிலோ தழைச்சத்து கொடுக்கும் ரசாயன உரம் இடவேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைத்தவுடன் ஒரு தண்ணீரும், பிறகு மூன்றாம் நாளும் அதைத் தொடர்ந்து 7 - 10 நாள்களுக்கு ஒருமுறையும் நீர்ப் பாய்ச்சவேண்டும்.

பின்செய்நேர்த்தி: விதைத்த 20 - 25 நாள்களுக்குப் பிறகு பயிர் களைதல் வேண்டும். களைந்த பயிரை பசுங்கீரையாகப் பயன்படுத்தலாம். தேவையானபோது களையெடுத்தல் வேண்டும்.

வேரழுகல்: வெந்தயப் பயிரில் வேரழுகல் நோய் தோன்றும்போது 0.5 கிராம் கார்பன்டாசிம் மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து வேர்ப்பாகத்தில் ஊற்றவேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்கவேண்டும். ஹெக்டேருக்கு 50 கிலோ பிண்ணாக்கை நோய் தோன்றும்போது இடவேண்டும்.

சாம்பல் நோய்: இந்நோய் தோன்றும்போது ஹெக்டேருக்கு 25 கிலோ சல்பரை தூவ வேண்டும் அல்லது 2 கிராம் நனையும் கந்தகத்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து இலைமேல் தெளிக்க வேண்டும்.

அறுவடை: விதைத்த 20 - 25 நாள்கள் கழித்து அறுவடை செய்து பசுங்கீரையாகப் பயன்படுத்தலாம். 90 - 100 நாள்களில் விதைகள் உருவாகிவிடும். ஹெக்டேருக்கு பசுங்கீரை 4,000 - 5,000 கிலோவும், விதைகள் 500 - 700 கிலோவும் மகசூலாக கிடைக்கும்.

## ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சி

திருப்பத்தூர் அருகேயுள்ள காரந்தல்பட்டி கிராம விவசாயிகளுக்கு வியாழக்கிழமை ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

திருப்பத்தூர் ஒன்றியம் திருக்களாப்பட்டி ஊராட்சிக்குள்பட்ட காரேந்தல்பட்டி கிராமத்தில் நிலக்கடலை பயிர் வயலில், நடைபெற்ற இம்மேலாண்மை பயிற்சிக்கு அட்மா துணைத் திட்ட இயக்குநர் ரா.கணேசன் தலைமை வகித்து எண்ணெய் வித்து பயிர் ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி வழங்கினார்.

திருக்களாப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் மூர்த்தி முன்னிலை வகித்தார்.

துணை வேளாண்மை அலுவலர் ஸ்ரீதரன் வரவேற்றார். தொடர்ந்து விதை நேர்த்தி விதைப்பு போன்ற தொழில் நுட்பங்களை செயல் விளக்கமாக வேளாண்மை அலுவலர் க,சீனிவாசன் எடுத்துரைத்தார். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் கிருஷ்ணசாமி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் தங்கப்பாண்டி, சண்முகபாண்டி ஆகியோர் செய்திருந்தனர்.

## சிறுதானிய உணவுப்பண்டங்கள் தயாரிக்கும் பயிற்சி

புதுக்கோட்டை அருகே நபார்டு வங்கி, ரோஸ் நிறுவனம் இணைந்து நடத்தும் சுய உதவிக் குழு பெண் உறுப்பினர்களுக்கான குறுந்தொழில் முனைவோர் பயிற்சி முகாம் வியாழக்கிழமை தொடங்கியது.

செல்லப்பா நகரில் உள்ள ரோஸ் தொண்டு நிறுவனத்தில் நடைபெற்ற சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியை சென்னை நபார்டு வங்கிப் பொது மேலாளர் செல்லத்துரை தொடங்கிவைத்துப் பேசினார். தொடர்ந்து, நபார்டு மாவட்ட வளர்ச்சி அதிகாரி எஸ். சோமசுந்தரம் பேசினார்.

நிகழ்ச்சியில், நபார்டு உதவிப் பொது மேலாளர் மாத்யூ, புதுக்கோட்டை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர் ஜி.எஸ். தனபதி, முதன்மைச் செயல் அலுவலர் அகிலா, பி.ஆர்.எம் நிறுவன இயக்குநர் ஜீவானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ரோஸ் நிறுவன இயக்குநர் ஏ. ஆதப்பன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் விஜயா நன்றி கூறினார்.

## மலர், காய்கனி கண்காட்சி இன்று தொடக்கம்

வேளாண்துறை சார்பில், காரைக்காலில் மலர், காய்கனி கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

இக்கண்காட்சி, விற்பனைக்காக பெங்களூரு, புனேயிலிருந்து மலர் செடிகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

வீட்டுத் தோட்டம், நிறுவனத் தோட்டம், நிலையத் தோட்டம், மாடித் தோட்டம், பள்ளித் தோட்டம், வீட்டுக் காய்கறித் தோட்டம்,

தென்னந்தோப்பு, பழத்தோப்பு, பூந்தோட்டம் உள்ளிட்டவைகளை அமைப்பதில் மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் காரைக்காலில் மலர், காய்கனி கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2011-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த இக்கண்காட்சி அதன்பின்னர் நிதி நெருக்கடி, புயல் தாக்கம் உள்ளிட்ட காரணங்களால் நடத்தப்படவில்லை. நிகழாண்டு 17-ஆவது மலர் கண்காட்சி புதுவை அரசின் வேளாண் துறை சார்பில் நடத்தப்படுகிறது.

இக்கண்காட்சி காரைக்கால் முருகராம் நகர் அருகே உள்ள நகராட்சித் திடலில் வெள்ளிக்கிழமை (பிப்.5) முதல் 7-ஆம் தேதி வரை 3 நாள்கள் நடைபெறுகிறது.

இதற்காக பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டு பூந்தொட்டிகள், அலங்காரச் செடிகள், மலர் செடிகள், பழக்கன்றுகள் தனித்தனி பிரிவுகளாக பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சி நடைபெறும் 3 நாள்களும் பாசிக் நிறுவனம் சார்பில் பூச்செடிகள், கன்றுகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதுதவிர வேளாண் உபகரணங்கள் பலவும் மானிய விலையில் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் கா.மதியழகன் வியாழக்கிழமை கூறியது: வேளாண்துறை சார்பில் காரைக்காலில் ரூ. 30 லட்சம் மதிப்பில் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

காரைக்கால் பகுதியினருக்கு தோட்டக்கலை, மலர், பழம் உள்ளிட்ட சாகுபடியில் ஆர்வம் ஏற்படும் நோக்கில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. இதற்காக பல்வேறு பிரிவினரிடையே கண்காட்சி தொடர்பாக போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதில், வெற்றி பெற்றவர்களுக்கு நிறைவு நாளின்போது பரிசு வழங்கப்படும். கண்காட்சி நிறைவடைந்த பிறகு கண்காட்சியில் வைக்கப்பட்ட செடிகள் விற்பனை செய்யப்படும் என்றார்.

## முழு மானியத்துடன் சொட்டுநீர்ப் பாசனம்: ஆதிதிராவிடர், பழங்குடியினர் விண்ணப்பிக்கலாம்

முழு மானியத்துடன் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வேளாண், தோட்டக்கலைத் துறைகள் மூலம் சிறு, குறு இதர விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. இதில், சிறப்பினமாக ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு தனியாகப் பெறப்பட்டுள்ளது. இதில், 5 ஏக்கர் வரை நில உடைமை உள்ளவர்களுக்கு முழு மானியத்துடன் கூடிய சொட்டுநீர்ப் பாசனக் கருவிகளும், 5 ஏக்கருக்கு மேல் நில உடைமை உள்ளவர்களுக்கு மானியத்துடனும் கருவிகள் தோட்டக்கலை, வேளாண் துறைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பயன்பெற விருப்பமுள்ளவர்கள் நில உடைமை குறித்த சிட்டா, அடங்கல், சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று, குடும்ப அட்டை நகல், நிலவரைபடம் போன்ற சான்றிதழ்களுடன் வட்டார வேளாண் விரிவாக்க மைய அலுவலர்களை அணுகலாம். இத் திட்டத்தின்கீழ் 10 ஆண்டுகள் குத்தகைக்குப் பதிவு செய்து விவசாயம் செய்பவர்களும் பயன்பெறலாம்.

## "பொறியியல் மாணவர்களின் படைப்புகள் வேளாண்மைக்கு உதவ வேண்டும்'

பொறியியல் மாணவர்களின் கண்டுபிடிப்புகள் வேளாண்மைக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று மாநில அளவிலான பயிலரங்கில் தெரிவிக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் எக்ஸல் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரி சார்பில் இரண்டு நாள் மாநில அளவிலான

பயிலரங்கம், ஆய்வு படைப்பு கண்காட்சி, இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து நடத்தும் அறிவியல், தொழில்நுட்பக் கண்காட்சி எக்ஸல் கல்வி நிறுவன வளாகத்தில் வியாழக்கிழமை தொடங்கியது.

கண்காட்சி தொடக்க விழாவிற்கு எக்ஸல் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஏ.கே.நடேசன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் என்.மதன்கார்த்திக் வரவேற்றார்.

கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் வி.கே.சண்முகநாதன், ஈ.பழனிச்சாமி, தொழில்சாலை உறவுகள், ஆராய்ச்சித் திட்ட இயக்குநர் டி.தேவகுமார் ஆகியோர் பேசினர்.

சிறப்பு விருந்தினராக இந்திய தொழிநுட்பக் கூட்டமைப்பின் சேலம் பிரிவு முன்னாள் தலைவர் எஸ்.தேவராஜன் அறிவியல், தொழில்நுட்பக் கண்காட்சியைத் தொடக்கி வைத்துப் பேசியது:

30 ஆண்டுகளுக்கு முன் இப்போது இருப்பது போல அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி கிடையாது. ஆனால், படிக்காத பலரும் தொழிலதிபர்களாக உருவாகினர்.

தற்போது அறிவியல் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சி அடைந்துள்ளோம். இந்த வளர்ச்சியைப் பொறியியல் பட்டதாரிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொறியியல் பட்டதாரிகள் விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிராம பொருளாதாரத்தை வளரச்செய்ய வேண்டும் என்றார்.

எக்ஸல் பாலிடெக்னிக் கல்லூரி மாணவ- மாணவியர் சென்னை வெள்ள பாதிப்பு குறித்த புகைப்படங்கள், ராட்சத கப்பல் வடிவ மாதிரி, நீண்ட வடிவிலான 3 சக்கர மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட படைப்புகளைக் காட்சிக்கு வைத்திருந்தனர்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து பல்வேறு பாலிடெக்னிக் கல்லூரிகள், பள்ளி மாணவ -மாணவியர் கண்காட்சியில் பங்கேற்றனர். இதில் மாணவ - மாணவியருக்கான போஸ்டர் வடிவமைப்பு, கட்டுரை சமர்ப்பித்தல், டப்

மாஸ், பென்சில் ஓவியம், தனி நபர் விளையாட்டுகள், குறும்படம், புகைப்படக் கலை, பல்வேறு படைப்பாற்றல் திறன் போட்டிகள், பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

கண்காட்சி 2ஆவது நாளாக வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. மாணவ - மாணவியருக்கான போட்டிகளும், மாலை நிறைவு விழாவும் நடைபெறுகிறது.

**விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பு பயிற்சி**

ராசிபுரம் அருகே வெண்ணந்தூர் வட்டராம் ஆலாம்பட்டிபுதூரில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை, கால்நடைத் துறை சார்பில், கறவை மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதற்கான தொடக்க விழாவில் வட்டார அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளரும், வேளாண்மை உதவி இயக்குநருமான கு.சுந்தரவடிவேல் வரவேற்றார்.

வெண்ணந்தூர் கால்நடை உதவி மருத்துவர் லில்லி அருள்குமாரி கறவை மாடு வளர்ப்பின் முக்கிய தொழில்நுட்பங்கள், நோய் தடுப்பூசி குறித்து விளக்கினார். உதவி கால்நடை மருத்துவர்களி நித்யா, பார்த்தசாரதி, கோமதி ஆகியோர் கறவை மாடு வளர்ப்பின் புதிய தொழில்நுட்பங்களான கன்று தேர்வு, வளர்ப்பு முறை, தீவன மேலாண்மை குறித்து விளக்கினர்.

வேளாண் அலுவலர் கை.வசுமதி, கறவை மாட்டுக்கான தீவன உற்பத்தி குறித்தும், துணை வேளாண் அலுவலர் பழனிசாமி, வேளாண் உதவி அலுவலர்கள் ஆரோக்கியசாமி, அந்தோனிசாமி, கருப்புசாமி, மேகலா ஆகியோர் தீவன விதை நேர்த்தி, மண்ணில் உண்டாகும் நோய் காரணிகளை நீக்கும் டிரைகோடெர்மாவிரிடி குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கமாக செய்து காண்பித்தனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## கும்பகோணம் டிகிரி காபி

மகாமக கும்பகோணம் டிகிரி காபிக்கும் பெயர் பெற்றது. பாலின் தரத்தை லாக்டோ மீட்டரால் அளந்து, தரத்தை உறுதி செய்த பின்னரே பயன்படுத்தினர். இதனால் தான் டிகிரி காபி எனப்பெயர் வந்தது. காபிக் கொட்டையில் ஏ, பி, ரோபோஸ்ட் என மூன்று வகைகள் உள்ளன. இதில் 'பி' வகை தான் தரம் வாய்ந்தது. கும்பகோணம் டிகிரி காபியில் 'பி' வகை தான் பயன்படுத்தப்பட்டது. பித்தளை, தாமிர டபரா செட்கள் வெப்பத்தை எளிதில் கடத்தாது. சூடு தாங்கும் என்பதால் பித்தளை, டபரா செட்டுகளிலேயே கும்பகோணம் டிகிரி காபி பரிமாறப்பட்டது.

## வேளாண் கழிவில் உரம் தயாரிக்க பயிற்சி

வாலாஜாபாத்;அட்மா திட்டம் சார்பில், வேளாண் கழிவு பொருட்களில் இருந்து இயற்கை உரம் தயாரித்தல் குறித்து, தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.வாலாஜாபாத் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், நேற்று காலை, 11:00 மணி அளவில் நடந்த, வேளாண் கழிவு பொருட்களிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பயிற்சி முகாமிற்கு, வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஜி.லதாபானுமதி தலைமை தாங்கினார். அட்மா தொழில்நுட்ப மேலாளர் எஸ்.கலியபெருமாள் முன்னிலை வகித்தார்.

காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மைய உதவி பேராசிரியர் பி.முருகன், வேளாண் கழிவு பொருட்கள், தென்னை நார் மற்றும் கரும்பு சோகை ஆகியவற்றிலிருந்து, இயற்கை உரம் தயாரிப்பது மற்றும் மக்கும் குப்பையில் மண் புழு உரம் தயாரிப்பது குறித்து, விவசாயிகளிடையே விளக்கி பேசினார். பயிற்சி முகாமில், வாலாஜாபாத் வட்டாரத்தைச்

சேர்ந்த, 40 விவசாயிகள் மற்றும் வேளாண் உதவி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## திருவூர் ரக நெல் விதை உற்பத்தி துவக்கம்

வாலாஜாபாத்;திருவூர் ரக நெல்லை, வாலாஜாபாத் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளிடம், விதை உற்பத்தி செய்வதற்கு, வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரை செய்து உள்ளது.தமிழகத்தில் ஆடுதுறை 45, ஆடுதுறை 51, ஆடுதுறை 36, பாபட்லா, கோ 51, டி.கே.எம்., 50, ஆகிய ரக நெல் விதைகளை, விவசாயிகள் உற்பத்தி செய்து, அரசு விதை பண்ணைக்கு வழங்கி வருகின்றனர். இருப்பினும், திருவள்ளூர் மாவட்டத்தின் புதிய ரகமான (டி.கே.எம்.,13) திருவூர்-13 ரக நெல்லை, வாலாஜாபாத் வட்டாரத்தில், கோவிந்தவாடி அகரம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகளுக்கு, காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது.

ஏற்கனவே, கோ.51 ரக நெல்லை பயிரிட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த புதிய ரக நெல்லும் உற்பத்தி செய்வது எளிது என, விவசாயிகளிடையே நம்பிக்கை எழுந்து உள்ளது. இதுகுறித்து, கோவிந்தவாடி அகரம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி பழனி கூறுகையில், 'காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் பரிந்துரையின் பேரில், ஒரு ஏக்கர் பரப்பில், திருவூர் ரக நெல் விதை உற்பத்திக்கு நடவு செய்து உள்ளேன். உர நிர்வாகமும்; நோய் தாக்குதலும் வெகு குறைவாக உள்ளது. இந்த ரகத்தின் மகசூல். அறுவடைக்கு பின்னர் தான் இதன் வெற்றி தெரியும்' என்றார்.

## தேயிலைக்கு குறைந்தபட்சமாக ரூ.15 விலை நிர்ணயம்

குன்னூர்: நீலகிரியில் உற்பத்தியாகும் பசுந்தேயிலைக்கு, குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு, 15 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேயிலை வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில், தேயிலை சந்தை கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ், மாதந்தோறும், பசுந்தேயிலைக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதன்படி, கடந்த டிச., வரை, கிலோவுக்கு, 13 ரூபாய் வரை மட்டுமே விலை இருந்த நிலையில், கடந்த மாத விலையாக, கிலோவுக்கு, 15 ரூபாய் என, விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேயிலை வளர்ச்சிப் பிரிவு துணை இயக்குனர் ஹரிபிரகாஷ் கூறுகையில், “இந்த விலைக்கு குறைவாக, தேயிலை தொழிற்சாலைகள், விவ சாயிகளுக்கு விலை வழங் கக் கூடாது,” என்றார்.

## சிறுதானிய சாகுபடி பயிற்சி

திண்டுக்கல்: ஒட்டன்சத்திரம் சிந்தலவாடம்பட்டியில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் அட்மா திட்டத்தின் மூலமாக சிறுதானியங்கள் சாகுபடி குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் அருணாசலம் தலைமை வகித்தார். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி செல்வமுகிலன், "சிறுதானியம் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை' குறித்து உரையாற்றினார். இறுதியில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வநாயகம் நன்றி கூறினார்.

## பூச்சொரியல் விழாவால் மல்லிகை, கனகாம்பரம் விலை அதிகரிப்பு

திண்டுக்கல்;கோட்டை மாரியம்மன் கோயில் பூச்சொரியல் விழாவையொட்டி திண்டுக்கல்லில் மல்லிகை, கனகாம்பரம் பூக்கள் விலை கிலோ ரூ.800 க்கு விற்பனையானது.

திண்டுக்கல்லில் மல்லிகை 961 எக்டேரிலும், கனகாம்பரம் 400 எக்டேரிலும் சாகுபடியாகிறது. மல்லிகை, கனாகாம்பரம், காக்கரட்டான், முல்லை, ரோஜா உள்ளிட்டவை மதுரை, நெல்லை, கன்னியாகுமரி, திருச்சி, சேலம் மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. திண்டுக்கல் மார்கெட்டிற்கு நாள்தோறும் மல்லிகை, கனகாம்பரம் 400 கிலோ வரை விற்பனைக்கு வரும்.

கடந்த சில மாதங்களாக மழையால் வரத்து முற்றிலுமாக குறைந்து விட்டது. பனிப் பொழிவும் உள்ளதால் பூக்கள் செடியிலேயே வாடி கருகி போகின்றன. இதனால் உள்ளூர் வரத்தும் வெகுவாக குறைந்துவிட்டது.

திண்டுக்கல்லில் பிரசித்தி பெற்ற கோட்டை மாரியம்மன் கோயிலில் மாசிப்பெரு விழா நேற்று துவங்கியது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான பூச்சொரியல் நிகழ்ச்சி இன்று காலை நடக்கிறது. இதனால் பக்தர்கள் பலரும் அதிகளவில் பூக்களை வாங்கி கோயிலுக்கு காணிக்கையாக செலுத்துவர். இதனால் மல்லிகை, கனகாம்பரம் பூக்களின் விலை நேற்று அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் ஒரு கிலோ மல்லிகை ரூ.500 , கனகாம்பரம் ரூ.400 க்கு விற்றது. நேற்று ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.300க்கும் மேலாக அதிகரித்து ரூ.800 முதல் ரூ.900, கனகாம்பரம் ரூ.400க்கும் மேல் அதிகரித்து ரூ.800 முதல் ரூ.850 வரை விற்பனையானது. இதேபோல் ஜாதி மல்லி ரூ.700, ரோஜா ரூ.40 , முல்லை ரூ. 120, அரளி ரூ.60, பிச்சி ரூ.90, சம்மங்கி ரூ. 70 க்கு விற்பனையானது.

வியாபாரி ஒருவர் கூறுகையில், "மல்லிகை, கனகாம்பரம் வரத்து குறைவாக இருப்பதாலும், இன்று பூச்சொரியல் விழா இருப்பதாலும் விலை அதிகரித்துள்ளது' என்றார்.

## விலையில்லா ஆடுகளை வளர்க்க கால்நடை தீவன சந்தை கோரிக்கை

க.பரமத்தி: க.பரமத்தி யூனியன் பகுதியில், தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில், பயனாளிகளின் ஆடுகளை வளர்க்க, க.பரமத்தியை மையமாக கொண்டு, கால்நடை தீவன சந்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில், எட்டு ஒன்றியங்களில் அதிக பஞ்சாயத்துக்களை கொண்ட யூனியன் வரிசையில், முதலிடத்தில் க.பரமத்தி யூனியன் உள்ளது. இதில், அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளிகுறிச்சி, நடந்தை, நெடுங்கர், க.பரமத்தி, பவித்திரம், புஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, தென்னிலை மேற்கு, தென்னிலை தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பிவாடி, விஸ்வநாதபுரி, உள்ளிட்ட, 30 பஞ்சாயத்துகளில் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதியில், மாடு, எருமை, வெள்ளாடு, செம்மறிஆடு போன்ற கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இதற்காக, பலர் தங்களது தோட்டத்தில் தீவன பயிர்களான கம்பு, புல், கினியாபுல், கொழுக்கட்டைப்புல், மற்றும் பயிறு வகையில் வேலிமால், குதிரைமசால், முயல்மசால், தீவன தட்டைபயிர் போன்றவை பயிரிட்டு கால்நடைகளுக்கு உணவாக கொடுத்து வருகின்றனர்.

தீவன பயிர்களை வளர்க்க நிலம் இல்லாத விவசாயிகள் சிலர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்து கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். சிலர் தங்களது கால்நடைகளை சாலையோரத்தில் மேயவிட்டு வளர்த்து வருகின்றனர். சாலையோரம் மேய விடும் போது விளை நிலங்களில் புகுந்து, பயிர்களை சேதம்படுத்துவதாக புகார் எழுந்துள்ளது. எனவே, 'க.பரமத்தி யூனியன் பகுதியில் தமிழக அரசின்

விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில், ஆடுகளை வளர்க்க கால்நடைகளுக்கான தீவன சந்தை அமைக்க வேண்டும்' என, கால்நடை வளர்ப்போர் எதிர்பார்க்கின்றனர்.

## கால்நடை பராமரிப்பு துறை சார்பில் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்

ஏற்காடு: ஏற்காடு வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், கால்நடை பராமரிப்பு துறை மூலம், வாழவந்தி கிராமத்தில் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி வழங்கும் முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் பாரதிநாதன் வேளாண்மை துறை சார்ந்த திட்டங்களையும், தொழில் நுட்ப விவரங்கள் குறித்து பேசினார். ஏற்காடு கால்நடை மருத்துவர் தேவேந்திரன் வெள்ளாடு வளர்ப்பின் சிறப்புகள் மற்றும் ஆடுகளை தேர்ந்தெடுத்தல் முறைகளை பற்றி பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி, அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களையும், பரண்மேல் ஆடு வளர்க்கும் தொழில் நுட்பங்களையும் விவரித்தார். வாழவந்தி கால்நடை மருத்துவர் முத்துகுமார் தீவன மேலாண்மை மற்றும் ஆடுகளுக்கு தடுப்பூசி போடும் முறைகள், வெள்ளாடு நோய் பராமரிப்பு முறைகள் குறித்து பேசினார். அரங்கம், பெலாக்காடு, புளியங்கடை, கொட்டச்சேடு, மாரமங்களம் மற்றும் வாழவந்தி ஆகிய பகுதிகளை சேர்ந்த வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சொட்டுநீர் மானியம்: திட்டத்துக்கு அழைப்பு

நாமக்கல்: வேளாண்மைத் துறையின் மூலம் சொட்டுநீர் பாசனம் மானியம் பெற விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

இதுகுறித்து, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்ட அறிக்கை: வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம் சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துத் தரப்பட்டு வருகின்றது. இதில், சிறப்பினமாக ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியின விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு தனியாகப் பெறப்பட்டுள்ளது. 5 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்கு, முழு மானியத்துடனும், அதற்கு மேல் நிலம் உள்ளவர்களுக்கு, 75 சதவீதம் மானியத்துடனும் சொட்டு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. விருப்பமுள்ளவர்கள் தங்களது நிலம் குறித்த சிட்டா, அடங்கல், சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று, ரேஷன் கார்டு நகல், நிலவரைபடம் போன்ற சான்றிதழ்களுடன் அந்தந்த பகுதியிலுள்ள வட்டார வேளாண்மை

விரிவாக்க மைய அலுவலர்களை அணுகி பயன்பெறலாம். 10 ஆண்டுகள் குத்தகைக்கு பதிவு செய்து விவசாயம் செய்பவர்களும் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கால்நடைக்கு சிகிச்சை அளிக்கும் கம்பத்தை சரி செய்ய கோரிக்கை**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் அருகே, கால்நடைகளை நிறுத்தி ஊசி போடும் கம்பம் கீழே சாய்ந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் சரி செய்யப்படாமல் உள்ளது.

பள்ளிபாளையம் அடுத்த, களியனூரில் வாரத்துக்கு ஒரு முறை கால்நடை டாக்டர் வந்து விவசாயிகளின் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பார். சினை ஊசி மற்றும் மருந்து போன்றவற்றை கொடுப்பதற்கு, இட்டி கம்பம் எனப்படும் கம்பி வேலி அமைத்து, அதனுள் மாடுகளை நிற்க வைத்து சிகிச்சை நடக்கும். அந்த இட்டி கம்பி கீழே சாய்ந்து, ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுகுறித்து, அப்பகுதியை சேர்ந்த சுப்பு கூறியதாவது: இதுகுறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டோம். எந்த நடவடிக்கை எடுக்கவில்லை. கால்நடைக்கு சிகிச்சை அளிக்கவேண்டும் என்றால், 5 கி.மீ தூரத்தில் உள்ள ரங்கனூர் கால்நடை மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். பாதிக்கப்பட்ட கால்நடைகள், அதிகளவு இருந்தால் மட்டுமே

இப்பகுதிக்கு டாக்டர்கள் வருகின்றனர். இங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த, நாச்சிப்பட்டியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கால்நடைத்துறை மூலம் ஆடுவளர்ப்பு விவசாயிகளுக்கு பண்ணை ஆடுவளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் சுந்தர வடிவேல், ஆடுவளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார். வெண்ணந்தூர் உதவி கால்நடை மருத்துவர் லில்லி அருள்குமாரி, புதிய தொழில்நுட்ப செய்திகள் மற்றும் ஆடுகளுக்கு நோய் தடுப்பூசி குறித்த செயல் விளக்கமும், உதவி கால்நடை மருத்துவர்களான, நித்யா, பார்த்தசாரதி, செல்வம் ஆகியோர் ஆட்டுக்குட்டிகள் தேர்வு, வளர்ப்பு முறை, தீவனமேலாண்மை, நோய் தடுப்பு காரணிகள், சந்தை வணிக செயல்பாடுகள், ஆடு வளர்ப்பின் இடர்பாடுகளை கலைவது போன்றவைகள் குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறினர். ஆடுவளர்ப்பில் உள்ள பிரச்னைகள் குறித்து விவசாயி சீனிவாசனும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், வெள்ளாடுகளுக்கான தடுப்பூசிகள், நன்மைகள் குறித்து விவசாயி பாஸ்கரும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரமேஷ், அட்மா திட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

## வேளாண் துறை வேண்டுகோள்

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் 2015 -16 ல் பெய்த மழையால் கண்மாய்கள் ,கிணறுகளில் இரண்டாம் போக சாகுபடிக்கு தேவையான தண்ணீர் இருப்பதால் நெல், சிறுதானியங்கள், பருத்தி, எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யலாம் . குறைந்த நீர்த்தேவை பயிர்களான உளுந்து, பாசிப்பயறு ,தட்டைபயறு பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்து கூடுதல் வருமானம் பெறலாம். அந்தந்தவட்டார

வேளாண்விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம் என, விருதுநகர் வேளாண்இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கும்ப கோணம் மகாமகத்திற்காக மேட்டூரிலிருந்து இன்று 5,000 கனஅடி நீர்திறப்பு



மேட்டூர் : கும்பகோணம் மகாமகத்திற்காக, இன்று மேட்டூர் அணையிலிருந்து 5 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கு நேற்று வினாடிக்கு 109 கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. நீர்வரத்தை காட்டிலும், திறப்பு அதிகளவில் உள்ளதால் நேற்று முன்தினம் 69.60 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 69.49 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 32.26 டிஎம்சி.

இன்று காலை 6 மணி முதல் அணையில் இருந்து வினாடிக்கு 5,000 கனஅடி நீர் திறக்கப்படும் எனவும், காவிரி டெல்டா மாவட்டங்களில்

வெயில் சுட்டெரிப்பதாலும் கும்பகோணம் மகாமக விழாவையொட்டியும் நீர் திறப்பு அதிகரிக்கப்பட உள்ளது என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முட்டை விலை 20 காசு குறைந்தது




நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில், முட்டை பண்ணை கொள்முதல் விலையில் 20 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் விலை 380 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஒரு வாரமாக என்.இ.சி.சி. முட்டை விலையை 400 காசுகளாக நிர்ணயம் செய்திருந்தாலும் பண்ணையாளர்கள் 380 காசுகள் முதல் 360 காசுகள் வரையிலும் பண்ணைகளில் விற்பனை செய்து வந்தனர்.

வியாபாரிகள் முட்டை தேவையை பொறுத்து விலையை குறைத்து வந்தனர். இப்படி இரட்டை விலை இருந்ததால் அது விற்பனையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, என்.இ.சி.சி நேற்று அதிரடியாக முட்டை விலையில் 20 காசுகள் குறைத்துள்ளது.

## பசும் தேயிலைக்கு குறைந்தபட்ச விலை ரூ.15 தேயிலை வாரிய துணை இயக்குனர் தகவல்

மஞ்சூர் : தென்னிந்திய தேயிலை வாரிய துணை இயக்குனர் ஹரிபிரகாஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு பிப்ரவரி மாதத்திற்கு குறைந்தபட்ச கொள்முதல் விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.15 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலையை அனைத்து தொழிற்சாலைகளும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். மேற்படி விலை வழங்காத தொழிற்சாலைகள் குறித்து விவசாயிகள் தேயிலை வாரியத்திற்கு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும் இதுகுறித்து தேயிலை வாரியத்தின் வளர்ச்சி அலுவலர்கள், தொழிற்சாலை ஆலோசனை அதிகாரிகள், துணை இயக்குனர்கள் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச விலை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி துவக்கம்

வேதாரண்யம், : நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி துவங்கியது. தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தப்படியாக உப்பு உற்பத்தியில் வேதாரண்யம் இரண்டாமிடத்தில் இருந்து வருகிறது. இங்கு 10,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 5 லட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அகஸ்தியன்பள்ளி, கோடியக்காடு, கடினல்வயல் பகுதிகளில் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. சென்றாண்டு பருவமழை அதிகமாக இருந்ததால் குறைந்த அளவே உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் தூத்துக்குடி, வேதாரண்யம் பகுதிகளுக்கு குஜராத்திலிருந்து உப்பு இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டது. தற்போது ஒரு டன் உப்பு ரூ.1,000க்கு விற்கப்படுகிறது. இதனால் வேதாரண்யம் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதில் உற்பத்தியாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் தான் முதல்கட்ட பணிகள் துவங்கி நடைபெறும். ஆனால் இந்தாண்டு உப்பு 100 கிலோ மூட்டை ரூ.1000க்கு விற்பதால் ஜனவரி மாதத்திலேயே முதல்கட்ட பணிகளை உற்பத்தியாளர்கள் துவங்கி விட்டனர். இதனால் தற்போது உப்பு வார்முதல் துவங்கியுள்ளது. முழுவீச்சில் உப்பள பணியில் வேலை நடப்பதால் விவசாய வேலைகளுக்கு ஆள் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தாண்டு துவக்கத்திலேயே வெயில் அடிப்பதால் உப்பு உற்பத்தி நன்றாக இருக்கும் என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் மகசூலை குவிக்க நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை அவசியம் வழிகாட்டுகிறது வேளாண்துறை

பழநி, : நிலக்கடலையில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து வேளாண்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய் வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும். இதன் விளைச்சல் எக்டேருக்கு 2.15 டன்னாக உள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை மானாவாரியில் ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. நிலக்கடலை பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண் துறையிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம். அதுபோல் பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது

தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும். எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ரெட்டியார்சத்திரம் அருகே 200 ஏக்கரில் சுண்டல் சாகுபடி

செம்பட்டி, : ரெட்டியார்சத்திரம் அருகே 200 ஏக்கரில் விவசாயிகள் சுண்டல் பயிரிட்டுள்ளனர் .ரெட்டியார்சத்திரம் அருகே கரிசல் பூமியான கரிசல்பட்டி, கோனூர், அனுமந்தராயன்கோட்டை, தருமத்துப்பட்டி, கசவனம்பட்டி பகுதியில் சுண்டல் பயிர் விவசாயிகள் அதிகம் உள்ளனர். இவர்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சுண்டல் பயிரை (கொண்டைக் கடலை) பயிரிட்டு வருகின்றனர். கார்த்திகை மாதம் பயிரிட்டிருந்த சுண்டல் பயிர் தற்போது நன்கு வளர்ந்து காய்த்துள்ளது. ஆனால் புழுக்களின் தாக்குதலில் இருந்து பயிரை காப்பாற்ற விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்து அடித்து வருகின்றனர்.

கோனூர்,கரிசல்பட்டி, அனுமந்தராயன்கோட்டை பகுதியில் பச்சை கம்பளம் விரித்தது போல் சுண்டல் பயிர் செடிகள் பசுமையாக உள்ளன.இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், எங்கள் பகுதியில் 200 ஏக்கரில் சுண்டல் பயிரிட்டுள்ளோம். சுண்டல் பயிர் பனியில் மட்டும் விளையக் கூடிய பயிராகும். குறிப்பாக கரிசல் பூமி ஈரப்பகத்தை அதிகநாள் தாக்குப்பிடிக்கும் என்பதற்காக கரிசல் மண்ணில் சுண்டல்

பயிர் நன்கு விளையும். மற்ற பயிர்களை போல் சுண்டல் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை என்பதால், இப்பகுதியில் அதிகளவில் பயிரிடுகிறோம் என்றனர்.

## வயிற்று கோளாறுகளை சரிசெய்யும் ஆகாய தாமரை




இருமலை போக்க கூடியதும், தோல் நோய்களை குணமாக்கும் தன்மை கொண்டதும், சிறுநீரை பெருக்கவல்லதும், உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியதும், பொடுகு இல்லாமல் செய்ய கூடியது என பல பயன்களை கொண்டது ஆகாய தாமரை. குளங்கள், குட்டைகள், ஏரிகளில் அதிகளவில் இருக்கும் தாவரம் ஆகாய தாமரை. இதன் இலைகள் மிகவும் மென்மையாக இருக்கும். நீர்நிலைகளை ஆக்கிமித்துள்ள இது விலங்குகளுக்கு உணவாக பயன்படுகிறது. பல்வேறு நன்மைகளை கொண்ட ஆகாய தாமரை நமக்கு அற்புதமான மருந்தாக விளங்குகிறது. சிறுநீரை பெருக்கும் தன்மை கொண்ட ஆகாய தாமரையானது பூஞ்சை காளான்களை அழிக்க கூடியது. நுண் கிருமிகளை அகற்றி ஆரோக்கியத்தை தருகிறது. ஆகாயத் தாமரை புண்களை ஆற்றும் மருந்தாகிறது. சிறுநீரக பைகளில் சேரும் கற்களை கரைக்கும். சிறுநீரகத்துக்கு பலத்தை கொடுக்கிறது. ஆகாய தாமரை இலைகளை பயன்படுத்தி வயிற்று கோளாறுக்கான மருந்து தயாரிக்கலாம்.

ஆகாய தாமரை இலையை அரைத்து சிறிது அரிசி மாவு, தேங்காய் பால்

விட்டு சேர்த்து கலந்து எடுக்கவும். இந்த பசையை நெய்யில் சேர்த்து வதக்கவும். இதனுடன் தேவையான உப்பு, சிறிது தண்ணீர் விட்டு களி பதத்தில் தயாரிக்கவும். இதை சாப்பிட்டுவர வயிற்றுபோக்கு சரியாகும். வயிற்று கடுப்பு, வலி குணமாகும். ஆகாயத் தாமரை இலை சாற்றை பயன்படுத்தி இருமலுக்கான மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் இலை சாறு, சம அளவு பன்னீர், சிறிது பனங்கற்கண்டு சேர்த்து கலந்து குடிக்கும்போது வறட்டு இருமல் இல்லாமல் போகிறது. இது 10 மில்லி வரை எடுத்துக்கொள்ளலாம்.ஆகாய தாமரை இலைகளை பயன்படுத்தி தோல் நோய்களுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். தேங்காய் எண்ணெயுடன், இலை பசையை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை பயன்படுத்தி வந்தால் ஆறாத புண்களும் ஆறும். தோல் நோய்கள் குணமாகும். ஆகாய தாமரையை பயன்படுத்தி தலை குளிப்பதற்கான தைலம் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: ஆகாய தாமரை இலை பசை, நல்லெண்ணெய், வெட்டிவேர் பொடி, சந்தன தூள், கஸ்தூரி மஞ்சள் பொடி.நல்லெண்ணெய் விட்டு, இலை பசையை குழம்பு பதத்தில்காய்ச்சவும்.

இதனுடன் சிறிது வெட்டிவேர் பொடி, சந்தன தூள், கஸ்தூரி மஞ்சள் பொடி சேர்க்கவும். இதை தலைக்கு தேய்து குளிப்பதால் பேன், பொடுகு இல்லாமல் போகும். தலைமுடிக்கு அற்புதமான மருந்தாகிறது. கண்கள் குளிர்ச்சி அடையும். தலைச் சூட்டை தணிக்கும். கோடைகாலத்தில் ஏற்படும் வெப்பத்தை தடுக்க இது பயன்படும். வாரம் ஒருமுறை தலையில் தேய்த்து குளித்து வர நன்மை தரும்.

# மூட்டு வலியை போக்கும் காலிஃபிளவர்




காலிபிளவர் மூளையை போன்ற தோற்றம் உடையது. இது மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. வைட்டமின் ஏ, பி, இ, கே சத்துக்கள் அதிகம் உள்ளன. தினமும் 90 கிராம் அளவுக்கு காலிபிளவர் சாப்பிடும்போது வைட்டமின் சி சத்து கிடைக்கிறது. மெக்னீசியம், பொட்டாசியம், கால்சியம் போன்றவை இருப்பதால் இதில் எதிர்ப்புசக்தி அதிகமாக உள்ளது. புற்றுநோய் வராமல் தடுக்கும் தன்மை கொண்ட காலிபிளவர் இதயத்துக்கு பலம் கொடுக்கிறது. செரிமான கோளாறுகளை சரிசெய்கிறது. இதை உணவில் சேர்த்துக்கொள்வதால் பல்வேறு நன்மைகள் விளையும். காலிபிளவரை பயன்படுத்தி கீழ்வாதம், முடக்குவாதத்தால் ஏற்படும் வலிக்கான மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் காலிபிளவர் பசை, சிறிது பூண்டு, மிளகு சேர்த்து, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைத்து குடித்தால் மூட்டுவலி, வாத ஜுரம், வீக்கம் சரியாகும். உடல் வலியும் குறையும். காலிபிளவர் இலைகளை பயன்படுத்தி அடிப்பட்ட வீக்கம், மூட்டு வலிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். விளக்கெண்ணெய்யுடன் காலிபிளவர் இலை பசையை சேர்த்து நன்றாக வதக்கி பத்தாக போட்டு துணிகட்டி வைத்தால் வலி, வீக்கம் சரியாகும். காலிபிளவரை பயன்படுத்தி சிறுநீரகம், இதயத்தை

பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் காலிபிளவர் பூ பசை, அரை ஸ்பூன் சீரகம், சிறிது மிளகுப்பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடிக்கவும். இது, இதயத்துக்கு பலம் கொடுக்கும் ஊட்டசத்தாகிறது. எலும்பு பலவீனம் அடையாமல் செய்கிறது. அடிபட்ட இடத்தில் ரத்தம் சேர்ந்து வீக்கம், ரத்தகசிவு இருந்தால் அவைகள் சரியாகும். சிறுநீர் பெருக்கியாக விளங்குவதுடன் ரத்த அழுத்தத்தை குறைக்கிறது. ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது. உன்னதமான இதய ஊட்டச்சத்தாக விளங்குகிறது.

காலிபிளவரை பயன்படுத்தி புற்றுநோய் செல்கள் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் காலிபிளவர் பசை, கால் ஸ்பூன் மஞ்சள் பொடி, அரை ஸ்பூன் சீரகம் சேர்த்து, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி 50 முதல் 100 மில்லி அளவுக்கு தினமும் புற்றுநோயாளிகள் எடுத்துக்கொள்ளும்போது, புற்றுநோய் செல்கள் வளர்வது தடுக்கப்படும். காலிபிளவரில் உள்ள ஊட்டச்சத்துகள் அனைத்தும் உடலுக்கு உன்னதமான மருந்தாகிறது. புற்று நோய் உருவாவதை தடுக்குகிறது. நார்ச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் இல்லாது செய்கிறது. காலிபிளவர் கருவில் உள்ள குழந்தையின் மூளை, முதுகுத்தண்டு வளர்ச்சிக்கு உதவுகிறது. மூட்டு வலியை குறைப்பதில் காலிபிளவர் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பூச்சிகடி விஷத்தை முறிக்கும் சப்பாத்தி கள்ளி**




நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவு பொருட்கள் மற்றும் மூலிகைகளில் இருந்து எளிய முறையில் மருத்துவத்தை தயார் செய்து நமது உடல் நலத்தை பேணலாம். பிரிக்ளி பியர் காக்டஸ் என்கிற தாவர பெயரை கொண்ட சப்பாத்தி கள்ளிக்கு பாதாள மூளி என்ற பெயரும் உள்ளது. சப்பாத்தி கள்ளி எந்த பகுதியிலும் எளிதிலும் வளரக் கூடிய தாவரமாகும். பாலை நிலங்களில் கூட நீண்ட காலத்திற்கு தாக்கு பிடிக்கும் தாவரமாக இது காணப்படுகிறது. பார்ப்பதற்கு முட்கள் நிறைந்த தாவரமாக காணப்பட்ட போதிலும், இது அரிய மருத்துவ குணங்களை கொண்டதாக விளங்குகிறது. சப்பாத்தி கள்ளி மிகுந்த சத்தூட்டம் கொண்ட உணவாக பயன்படுகிறது. மெக்சிகோ நாட்டில் அதிகம் விளையும் இதை பொடி செய்து டப்பாக்களில் அடைத்து ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வயிற்று வலி உள்ளிட்ட பிரச்னைகளுக்கும் இது மருந்தாகிறது. சப்பாத்தி கள்ளியின் வேர் பகுதியை பயன்படுத்தி விஷமுறிவுக்கான மருந்து ஒன்றை நாம் இப்போது தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் சப்பாத்தி கள்ளியின் வேர் பகுதி. முட்கள் காணப்படும் என்பதால் இதை கவனமாக பிரித்து நீரில் விட்டு அலசி சுத்தம் செய்து

கொள்ள வேண்டும். இதனுடன் சிறிது அளவு மிளகு சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனுடன் ஒரு டம்ளர் அளவுக்கு நீர் சேர்க்க வேண்டும்.

நன்றாக கொதிக்க வைத்து பின்னர் இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் சிறிதளவு தேன் சேர்த்து தினமும் ஒன்று அல்லது இரண்டு வேளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொள்வதன் மூலம் பூச்சி கடி, வண்டு கடி, பூரான் கடி போன்ற சமயங்களில் சப்பாத்திகள்ளி விஷமுறிவு மருந்தாக பயன் தருகிறது. அது மட்டுமின்றி சில மூலிகைகளால் ஏற்படும் விஷத்தன்மையை போக்கும் குணமும் சப்பாத்தி கள்ளியின் வேருக்கு உள்ளது. அதே போல் சப்பாத்தி கள்ளியின் இலைகளை பயன்படுத்தி விஷக்கடிக்கான மேற்பூச்சு மருந்தை தயார் செய்யலாம். தேள் கடி, தேனீக்கடி, குளவிக்கடி போன்ற நேரங்களில், சப்பாத்தி கள்ளியின் இலைகளில் உள்ள முட்களை அகற்றி விட்டு நன்றாக நசுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இது சற்று கொழகொழப்பான தன்மையுடன் காணப்படும். இதனுடன் ஒரு துளி சிறிது சுண்ணாம்பு சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். பின்னர் இதை விஷக்கடி பட்ட கடிவாயில் பூச வேண்டும். இதை அப்படியே ஒரு பற்று போல் போட்டு கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் கடியால் ஏற்பட்ட வலி, வீக்கம், சிவப்புத்தன்மை போன்ற தொல்லைகளில் இருந்து விடுபடலாம்.

சப்பாத்தி கள்ளியின் இலைகளில் உள்ள முட்களை அகற்றி விட்டு நன்றாக சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அதை 10 துண்டுகள், 5 மிளகை பொடி செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து தேநீராக தயாரித்துக் கொள்ள வேண்டும். இதை வடிகட்டி பருகுவதன் மூலம் வெயில் காலத்தில் ஏற்படும் உடல் உஷ்ணத்தை, களைப்பை, தாகத்தை போக்கக் கூடிய அற்புதமான உணவாக சப்பாத்தி கள்ளி விளங்குகிறது.

**மூலிகை மந்திரம் : அசோக மரம்**



பழம்பெரும் இந்திய இதிகாசமான ராமாயணம் சொல்லும் செய்தியின்படி, அசோக மரங்கள் நிறைந்த வனத்தில்தான் சீதாதேவி சிறை வைக்கப்பட்டிருந்தார். சீதைக்கு ஏற்பட்ட சோகத்தை அகற்ற உதவிய மரம் என்பதால்தான் 'அ'சோக மரம் என்ற பெயரே வந்தது என்பார்கள். அதனால்தானோ என்னவோ, அசோக மரத்தின் பூ, பட்டை என அத்தனைப் பகுதிகளும் பெண்களைப் பாதிக்கும் பல நோய்களைப் போக்கக்கூடிய, பெண்களுக்கான சிறப்பான மருத்துவ மூலிகையாக விளங்குகிறது.

சாயை, அங்கணப்பிரியை, கிருமிகாரகம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படும் அசோக மரத்தின் தாவரவியல் பெயர் Saraca indica. அசோகு, ஹேம்புஷ்பா, தாம்ரபல்லவா என வடமொழியிலும் பல பெயர்கள் உண்டு. இந்திய மண்ணில் எங்கும் சாதாரணமாக வளரக்கூடியது. குறிப்பாக, இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் அதிகம் வளர்கிறது. அசோக மரத்தின் மருத்துவ குணங்கள் அசோக மரத்தின் பட்டை பசியின்மை குறைபாட்டை நீக்கிப் பசியைத் தூண்டவும், பித்தம் உபரியாகிப் பல்வேறு நோய்கள் உண்டாகா வண்ணம் இரைப்பைக் கோளாறுகளுக்கு தடுப்புச் சுவராக நின்றும்

உதவுகிறது.

அசோக மரத்தினுடைய பட்டை பெண்களின் கருப்பைக்கு வருகிற பல்வேறு நோய்களைப் போக்கக் கூடியது. கருப்பைக்கு பலம் தரக்கூடியதாகவும் இருக்கிறது. மேலும் வெள்ளைப்போக்கினை இல்லாமல் செய்யக்கூடியது. மாதவிலக்குக் காலங்களில் ஏற்படும் கடுமையான இடுப்பு வலி, வயிற்று வலி போன்ற பிரச்னைகளைத் தணிக்கக் கூடியதாகவும் அசோக மரப்பட்டை விளங்குகிறது. இந்திய ஆயுர்வேத நூல்கள் அசோக மரப்பட்டை மாதவிலக்கு காலங்களுக்கு இடையே ஏற்படும் ரத்தம் கசிதல் போன்ற துன்பத்தையும், அதிக உதிரப்போக்கையும், தொற்றுகளையும், உடலில் பல்வேறு இடங்களில் காணும் வீக்கங்களையும் குணப்படுத்தக்கூடியது என்று பரிந்துரை செய்கின்றன.

அசோக மரத்தின் பூக்களுக்கு ரத்தப்போக்கைத் தணித்து, சீதபேதியையும் தடுத்து நிறுத்தும் வல்லமை உண்டு. மூலநோயையும் குணப்படுத்தவல்லதாக அசோக மரப் பூக்கள் இருக்கின்றன. அசோக மரத்துப்பட்டை உடலுக்குக் குளிர்ச்சி தருவதாகவும், வயிற்றிலுள்ள பூச்சிகளைக் கொன்று வெளியேற்றக் கூடியதாகவும், மேற்பூச்சு மருந்தாகிப் புண்களை ஆற்றுவதாகவும், வயிற்றுக் கோளாறுகளை வேரறுக்கச் செய்வதாகவும், காய்ச்சலைத் தணிக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

‘வாதபித்த சேத்ம வரிசைபெறு மூவருக்கும்
ஆகரவாய் மெய்யி லமருமே - பூதலத்தில்
வீண் பிண்டி போல விடுமுடம்பை யுந்தணிக்கும்
காண்பிண்டி யாம சேகம்’ என்கிறது தேரையர் வெண்பா.

வாதம், பித்தம், சிலேத்துமம் என்று வரிசைப்படுத்தி சொல்கிற வளி எனும் காற்று தொடர்பான நோய், பித்தம் என்கிற உஷ்ணத்தை அடிப்படையாகக் கொண்ட நோய். சிலேத்துமம் என்னும் சீதனத்தை

(நீரை) அடிப்படையாகக் கொண்ட நோய் ஆகிய அனைத்தையும் போகச் செய்து உடலுக்கு ஆதரவாக நின்று உடலைக் காக்கும். செக்கிலிட்டு எண்ணெய் எடுத்துப் பெற்ற புண்ணாக்குப் போல உடலை வற்றச் செய்யும் உதிரப்போக்கினைக் கண்டிக்கும். அதோடு, நீரிழிவையும் தணிக்கக்கூடியது என்பதே மேற்சொன்ன பாடலின் பொருள்.

**அசோக மரம் மருந்தாகும் விதம்** அசோக மரத்தின் பூவை இடித்துப் பசையாக்கி நீரில் சேர்த்துக் கலக்கிக் குடிப்பதால் ரத்தக்கசிவு, ரத்த சீதபேதி, ரத்த மூலம், வலியுடன் கூடிய சிறுநீர் வெளியேறுவது ஆகிய நோய்கள் குணமாகும். பட்டையை இடித்துச் சாறு பிழிந்து அந்தி சந்தி என இருவேளையும் 10 மி.லி. அளவு உள்ளுக்குக் கொடுத்து வருவதால் பெரும்பாடு என்னும் அதிக ரத்தப்போக்கு கட்டுக்குள் அடங்கும்.

அசோக மரத்தின் இலையை இடித்துச் சாறு எடுத்து அதனோடு சிறிது சீரகத்தைப் பொடித்துச் சேர்த்து உள்ளுக்கு சாப்பிடுவதால் வயிற்றை இழுத்துப் பிடித்தாற்போல் வலிக்கும் வலி, வயிற்று உப்புசம், வயிற்று எரிச்சல், வயிற்றுப்புண் ஆகியன குணமாகும். பூக்கள், விதைகள், பட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தீநீராக்கிக் குடிப்பதால் கருப்பைக்கு பலம் தருவதாகவும் பல்வேறு கருப்பைக் குற்றங்களைப் போக்குவதாகவும் செயல்படும் மருந்தாகும். அசோக மரத்துப் பூக்களை இடித்துத் தீநீராக்கி தினம் இருவேளை எனச் சில நாட்கள் தொடர்ந்து குடித்து வருவதால் கருப்பையின் வாய்ப்புற அழற்சி, பித்த மேலீடு, பால்வினையால் வந்த கொருக்குப் புண்கள், அதிகமான நாவறட்சி, ரத்தம் அதிகமாகக் கலந்து வெளியேறும் ரத்த சீதபேதி, ரத்தக் கசிவு, படை என்னும் தோல் நோய் ஆகியன குணமாகும். அசோகப்பட்டை 100 கிராம் அளவு எடுத்து நன்றாக சிதைத்து 200 மி.லி. பாலும் 800 மி.லி. நீரும் சேர்த்துக் கலந்து அடுப்பிலேற்றி சிறு தீயில் நன்றாகக் கொதிக்க விட்டு ஐந்தில் ஓர் பங்காகச் சுண்டச் செய்து தினம் இருவேளை உள்ளுக்குக் கொடுத்து வருவதால் ரத்தப்போக்கு நின்று போகும். கருப்பையைச் சார்ந்த அத்தனைக் குற்றங்களும் கரைந்து போகும். வீட்டுவிலக்கு ஆகி மூன்றாம் நாளுக்கு மேலும் தொடர்கின்ற ரத்தப்போக்கும் நிற்கும்.

அசோக மரத்துப் பூக்களை சேகரித்து நீரிலிட்டுக் காய்ச்சிக் குடிப்பதால் அடிபட்ட காயம், அதனால் மனநிலையில் ஏற்பட்ட பாதிப்பு ஆகியன குணமாகும்.

அசோக மரத்துப் பூவின் தீநீர் ஆழ்மனத்தில் கவலை, பதட்டமான உணர்வு ஆகியவற்றையும் கட்டுப்படுத்தக்கூடியது.அசோக மரப் பூக்களையோ, பட்டையையோ குடிநீராக்கிக் குடிப்பதால் வயதானவர்களுக்கு ஏற்படும் பல்வேறு உடல் நோய்களும் மன நோய்களும் குணமாகிறது. பெண் மலடு, குழந்தைப்பேறு ஏற்படுவதில் தாமதம் என்கிற நிலையில் 20 முதல் 30 கிராம் அளவு அசோக மரப்பட்டையை எடுத்து நீரிலிட்டுக் காய்ச்சி இனிப்பு சேர்த்து அன்றாடம் குடித்து வருவதால் விரைவில் கருப்பைக் குற்றங்கள் விலகி கருத்தரிக்க உதவும்.சீதையின் துயர் துடைத்த மரம், புத்தர் அவதரித்த மரம்... இப்படி தெய்வீகத் தொடர்பு கொண்டது என்பதோடு, பூக்கள் நிறைந்த அழகு தரும் மரமாகவும், ஆரோக்கியத்தை அள்ளித்தரும் மரமாகவும் விளங்கும் அசோக மரத்தை வளர்ப்போம்... பயன் பெறுவோம்!

**பேபி கார்ன்**



சோளம் பிடிக்காதவர்களுக்குக் கூட அதன் மினியேச்சரான பேபி கார்ன் பிடிக்கும். சோள முத்துகளில் இருந்து முற்றிலும் மாறுபட்ட சுவையைக்

கொண்டது பேபி கார்ன்.அளவில் சிறிதானாலும் அபரிமிதமான ஆரோக்கியம் நிறைந்தது இது. நாம் வழக்கமாக எடுத்துக் கொள்கிற உணவுகளில் தவறிப் போகிற ஊட்டச்சத்துகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டது பேபி கார்ன்.பேபி கார்னில் என்ன இருக்கிறது, அதை எப்படி சமைப்பது எனத் தெரியாதவர்களுக்கு, பேபி கார்ன் பெருமைகளைப் பட்டியலிடுவதோடு, அதை வைத்து ஆரோக்கியமான மூன்று உணவுகளையும் சமைத்துக் காட்டியிருக்கிறார் டயட்டீஷியன் நித்யஸ்ரீ.

பேபி கார்ன் மிக அதிகளவு வைட்டமின் பி சத்தை கொண்டது. ஃபோலிக் அமிலம், தயாமின், ரிபோஃப்ளேவின் மற்றும் நியாசின் ஆகியவை நிறைந்தது. செரிமானம் சீராக இருக்க வைட்டமின் பி மிக முக்கியம். இதில் உள்ள ஃபோலேட், மூளையின் செயல்பாட்டுக்கு மிக முக்கியமானது. புதிய செல்கள், குறிப்பாக ரத்த செல்கள் உருவாகவும், நினைவாற்றல் மேம்படவும் உதவுபவை. சாதாரண கார்னை விட, பேபி கார்னில் கிளைசெமிக் இன்டக்ஸ் குறைவு. அதாவது, பேபி கார்ன் மூலம் உடலுக்குச் சேரும் கார்போஹைட்ரேட்டின் அளவு குறைவு.

பேபி கார்னில் மெக்னீசியம், இரும்புச்சத்து, தாமிரம் மற்றும் பாஸ்பரஸ் ஆகிய சத்துகள் அபரிமிதமாக உள்ளன. இந்தச் சத்துகள் எல்லாம் எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு உதவுவதுடன், வயதாவதன் காரணமாக எலும்புகள் முறிந்து போவதையும் தவிர்க்கின்றன. சிறுநீரகங்களின் சீரான செயல்பாட்டுக்கு உதவுகின்றன.

நார்ச்சத்து நிறைந்தது என்பதால் மலச்சிக்கலை விரட்டுகிறது. கொலஸ்ட்ரால் சேராமல் தடுக்கிறது. பெருங்குடல் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கிறது. பேபி கார்னில் உள்ள கரோட்டினாயிட்ஸ், வைட்டமின் சி மற்றும் பயோ ஃப்ளேவனாயிட்ஸ் போன்றவை இதயத்தின் ஆரோக்கியம் காத்து, ரத்த ஓட்டத்தை சீராக வைக்கக்கூடியவை.

இரும்புச்சத்துக் குறைபாட்டால் ரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைந்து அனீமியா எனப்படுகிற ரத்தசோகை ஏற்படுவதை பேபி கார்ன் தடுக்கிறது. காரணம், அதிலுள்ள வைட்டமின் பி மற்றும் ஃபோலிக் அமிலம். இதில் உள்ள ஆன்ட்டிஆக்சிடென்ட்ஸ், சருமத்தை இளமையாக வைத்திருக்க உதவுகிறது. சருமத்தில் ஏற்படுகிற சிலவகைப் பிரச்னைகளுக்கு கார்ன் ஸ்டார்ச் மருந்தாகவும் பயன்படுகிறது.

கர்ப்பிணிகள் பேபி கார்னை அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம். உயர் ரத்த அழுத்தம் இருந்தாலோ, கை, கால்களில் வீக்கம் அதிகமிருந்தாலோ மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகு அதை எடுத்துக் கொள்வதே பாதுகாப்பானது. கர்ப்பிணிகளுக்கு ஃபோலிக் அமிலக் குறைபாடு இருந்தால், அது குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கும். பேபி கார்ன் சாப்பிடுவதன் மூலம் அதைத் தவிர்க்கலாம்.

என்ன இருக்கிறது? (100 கிராமில்) ஆற்றல் - 86 கிலோ கலோரி

கார்போஹைட்ரேட்-18.70கிராம்

புரதம்-3.27கிராம்

நார்ச்சத்து-2கிராம்

வைட்டமின்ஏ-187IU

வைட்டமின்சி-6.8மி.கி.

வைட்டமின்இ-0.07மி.கி.

சோடியம்-15மி.கி.

பொட்டாசியம்-270மி.கி.

துத்தநாகம்-0.46மி.கி.

எப்படிவாங்குவது?

எப்போதுமே ஃப்ரெஷ் பேபி கார்னாக வாங்குவதுதான் சிறந்தது. டின்களில் அடைக்கப்பட்ட, பதப்படுத்தப்பட்ட கார்னில் சோடியம் அதிகம் சேர்க்கப்பட்டிருக்கும். முத்துகள் பிஞ்சாக இருக்கவேண்டும்.

எப்படிப்பாதுகாப்பது?

வாங்கிய உடனேயே ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டால் அதன் இனிப்புச்சுவை குறையாமல் இருக்கும். தோல் நீக்கப்படாத பேபி கார்ன் என்றால் ஒரு வாரம் வரை ஃப்ரிட்ஜில் வைத்துப் பயன்படுத்தலாம்.

எப்படிசமைப்பது?

பேபி கார்னை சாலட்டில் அப்படியே சேர்க்கலாம். அதன் அளவு, இள மஞ்சள் நிறம், ருசி என எல்லாமே சிறப்பாக இருக்கும். சமைப்பதற்கு முன், மேல் தோலை நீக்கிவிட்டு, சுத்தமான தண்ணீரில் அலசிவிட்டுப் பயன்படுத்தவும். ஆவியில் வேக வைத்து, தேவையானால் மசாலா தூவி அப்படியே சாப்பிடலாம். மற்ற காய்கறிகளை சமைக்கும்போது, பேபி கார்னையும் சேர்த்துக் கொள்ளலாம். காய்கறி சூப் செய்கிற போது, பேபி கார்னை அப்படியே பச்சையாக சேர்த்துப் பரிமாறலாம். விருப்பமான மசாலா கலவையில் சிறிது நேரம் ஊற வைத்து, தனியாகவோ, மற்ற காய்கறிகளுடன் சேர்த்தோ சைட் டிஷ்ஷாக செய்யலாம்.

பேபிகார்ன்மசாலாஃப்ரை
என்னென்னதேவை?

பேபி கார்ன் - 50 கிராம், மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், கரம் மசாலா தூள் - கால் டீஸ்பூன், இஞ்சி-பூண்டு விழுது - அரை டீஸ்பூன், எலுமிச்சைச்சாறு - சில துளிகள், கார்ன் ஃப்ளார் - அரை டீஸ்பூன், அரிசி மாவு - அரை டீஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப, எண்ணெய் - 2 டீஸ்பூன்.

எப்படிச்செய்வது?

பேபி கார்னை மெலிதாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போடவும். அத்துடன் மிளகாய் தூள், கரம் மசாலா, இஞ்சி-பூண்டு விழுது, அரிசி மாவு, கார்ன்

ஃப்ளார், உப்பு, எலுமிச்சைச்சாறு எல்லாம் சேர்த்துக் கலக்கவும். 10 நிமிடங்கள் ஊற வைத்த பிறகு, சூடான எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

பேபிகார்ன்ஸ்டிக்ஸ்

என்னென்னதேவை?

பேபி கார்ன் - 50 கிராம், குடை மிளகாய் - 50 கிராம், பனீர்- 20 கிராம், காளான் - 30 கிராம், எலுமிச்சைச்சாறு - 3 துளிகள், புதினா - சிறிது, எண்ணெய்- 2 டீஸ்பூன், உப்பு - தேவைக்கு, மிளகுத்தூள் - அரை டீஸ்பூன்.

எப்படிச்செய்வது?

பேபி கார்னை வட்ட வில்லைகளாகவும், குை◌டமிளகாய், பனீர், காளானை சதுரத் துண்டுகளாகவும் வெட்டிக் கொள்ளவும். அவற்றை சுத்தமான மரக்குச்சிகளில் ஒன்றன் பின் ஒன்றாகக் குத்தி வைக்கவும். தோசைக் கல்லை சூடாக்கி, எண்ணெய் விட்டு அதன் மேல் குச்சிகளைப் பரப்பி வைக்கவும். குச்சிகளைத் திருப்பி, எல்லா பக்கங்களிலும் வேகும்படி செய்யவும். புதினா, உப்பு, மிளகுத்தூள், எலுமிச்சைச்சாறு தூவி,பொன்னிறமானதும்எடுத்து
சூடாகப்பரிமாறவும்.

பேபிகார்ன்சாலட்

என்னென்னதேவை?

பேபி கார்ன்- 20 கிராம், மஞ்சள் மற்றும் பச்சை குை◌டமிளகாய் - தலா 20 கிராம், வெங்காயத்தாள் - 10 கிராம், பாதாம் - 10 கிராம், புதினா - சிறிது, உப்பு- தேவைக்கு, மிளகுத்தூள் - அரை டீஸ்பூன், எலுமிச்சைச்சாறு - சில

துளிகள்.

எப்படிச்செய்வது?

பேபி கார்ன், குடைமிளகாய், வெங்காயத்தாள், புதினா எல்லாவற்றையும் நறுக்கவும். பாதாமை ஸ்லைஸ் செய்யவும். ஒரு அகலமான பாத்திரத்தில் இவை எல்லாவற்றையும் போட்டுக் கலந்து, உப்பு, மிளகுத்தூள், எலுமிச்சைச்சாறு கலந்து பரிமாறவும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## காவிரி டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்; ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

அரசு நிர்ணயித்த விலைக்கு விற்பனை செய்வதற்காக டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

உரிய விலை

இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

வேளாண் தொழிலை மேற்கொண்டுள்ள உழவர்களின் வாழ்வு வளம்பெற பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. வேளாண் உற்பத்தியை பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது.

எனவேதான் நெல் மற்றும் கரும்பு ஆகியவற்றுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையை விட அதிக விலையை எனது அரசு ஆண்டுதோறும் நிர்ணயித்து வருகிறது. அந்த அடிப்படையிலேயே, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 410 ரூபாயுடன் தமிழக அரசின் சார்பாக கூடுதலாக 50 ரூபாய் வழங்கப்படுகிறது.

அதுபோல சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஆயிரத்து 450 ரூபாயுடன் தமிழக அரசின் சார்பில் கூடுதலாக 70 ரூபாய் வழங்கப்படுகிறது. அதன்படி, நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்கும் விவசாயிகளுக்கு, 1.10.15 முதல் சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 460 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 520 ரூபாயும் வழங்கப்படுகிறது.

தேவைக்கு ஏற்ப...

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து தமிழக அரசு நெல் கொள்முதல் செய்து வருகிறது. காவிரி பாசனப் பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், பிற மாவட்டங்களில் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்த 2014–15–ம் ஆண்டு முதல் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்ய தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம் அனுமதிக்கப்பட்டுள்ளது. காவிரி பாசன டெல்டா பகுதிகளில், தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஆயிரத்து 292 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை 3 லட்சத்து 10 ஆயிரத்து 870 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைக்கு ஏற்ப தொடர்ந்து செயல்படும்.

டெல்டா அல்லாத மாவட்டங்கள்

டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் நடப்பு பருவத்தில் இந்த ஆண்டு 28.34 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பகுதி விவசாயிகளின் நலன் கருதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 61 நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் மேலும் திறக்கப்பட வேண்டுமென விவசாயப் பெருமக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, விவசாய பெருமக்களின் நலனை கருதி, டெல்டா அல்லாத மாவட்டங்களில் கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

நீண்ட பயணம் இல்லை

தேவைக்கு ஏற்ப மாவட்ட கலெக்டர்கள் உத்தரவின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்களை திறந்திட நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் காரணமாக, விவசாயிகள் நீண்ட தூரம் பயணம் செய்யாமல், உற்பத்தி செய்யப்படும் நெல்லை, அரசு நிர்ணயித்த விலைக்கு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய இயலும். எனது இந்த நடவடிக்கை விவசாய பெருங்குடி மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வால்பாறையில் குறுமிளகு பறிக்கும் பணி மும்முரம்



வால்பாறை,
வால்பாறையில் குறுமிளகு பறிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ஊடுபயிர்கள்

வால்பாறை பகுதியில் காபி, தேயிலை, ஏலக்காய், மிளகு போன்ற பணப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் தேயிலை மட்டுமே ஆண்டு முழுவதும் பயன்தரக்கூடியது. காபி, ஏலக்காய்,மிளகு போன்றவைகள் அதனதன் பருவத்தில் மட்டுமே பயன்தரக்கூடியது.

எஸ்டேட் பகுதிகளில் தேயிலை செடிகளுக்கு நிழல் தருவதற்காகவும், மண்அரிப்பை ஏற்படுவதை தடுப்பதற்காகவும் தேயிலை தோட்டங்களின் நடுவே ஊடுபயிராக மரங்கள் நடப்பட்டுள்ளன. இந்த மரங்களில் தேயிலை தோட்ட நிர்வாகங்கள் குறுமிளகு கொடிகளை பயிரிட்டுள்ளனர்.

பறிக்கும் பணி

இந்த மிளகு கொடிகளில் கடந்த ஆண்டு மே மாதம் இறுதியில் பூக்கள் பூக்கத்தொடங்கின. தற்போது ஊடுபயிராக பயிரிடப்பட்டிருந்த குறுமிளகு நன்கு காய்த்துள்ளன. இதனால் தேயிலை தோட்ட நிர்வாகங்கள் மிளகு பறிக்கும் பணியை தொடங்கி உள்ளன. இந்த பணியில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து தொழிலாளர்கள் கூறியதாவது:–

வால்பாறை பகுதியில் கரிமுண்டா, பன்னியூர் ஆகிய 2 வகை குறுமிளகுகள் பயிரிடப்பட்டுள்ளன. விளைச்சல் நன்கு கிடைத்துள்ளதால் பறிக்கும் பணியில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வெளிச்சந்தையில் ஒரு கிலோ குறுமிளகு ரூ.800 வரை விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**வரதனூரில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்: பயிர்கள் செழித்து வளர மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் வேளாண்மைத்துறை இணை இயக்குனர் பேச்சு**



கிணத்துக்கடவு,

வரதனூரில் நடந்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் பயிர்கள் செழித்து வளர மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகர் கூறினார்.

பயிற்சி முகாம்

கிணத்துக்கடவு அருகே உள்ள வரதனூரில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டம் (அட்மா) சார்பில் விவசாயிகளுக்கு பயிர்களில் எஞ்சிய நச்சு மேலாண்மை தொடர்பான பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு ஊராட்சி தலைவர் கலைகுமார் தலைமை தாங்கினார். கிணத்துக்கடவு வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் வடிவேல் முன்னிலை வகித்தார். இதில் கோவை வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகர் கலந்து கொண்டு பேசும் போது கூறியதாவது:–

பயிர்களில் நச்சு குறித்து விவசாயிகள் நன்கு புரிந்திருக்க வேண்டும். இதனை தடுக்க விவசாயிகள் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது. முதலில் விவசாயத்தின் போது பயிறு வகை செடிகளுக்கு அதற்கு தகுந்தார் போல் உரம் பயன்படுத்த வேண்டும். தக்க சமயத்தில் சரியான அளவை மட்டும் பயன்படுத்தவேண்டும்.

மண் வளத்தை பாதுகாக்க வேண்டும்

விவசாய பயிர்களுக்கு சிலர் அதிக அளவு பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்துகிறார்கள். இதனால் தற்போது நிலங்களிள் மண்புழுவினை காண்பது அரிதாகி விட்டது. சரியான அளவு உரமிட்டு, பூச்சி, நோய்களை கட்டுப்படுத்த மருந்து அளவினை குறைந்த அளவு பயன்படுத்த வேண்டும்.

மேலும் விவசாயிகள் தங்களது விவசாய நிளத்தில் உள்ள மண்ணை பரிசோதனை செய்தால் மண் வளத்தை பாதுகாக்க முடியும். நிலத்தில் உள்ள சத்து பற்றாக்குறையை கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்ய முடியும். பயிர்கள் நன்கு செழித்து வளர விவசாயிகள் மண் வளத்தை பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் வட்டார தொழில் நுட்பமேலாளர் பிரியங்கா பயிர் சுழற்சி முறைகள் பற்றி பேசினார். முகாமில் வேளாண்மை அலுவலர் வளர்மதி, உதவி வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள்

கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் தினேஷ்குமார், உழவர் நண்பர் வரதராஜ் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் நந்தகுமார் நன்றி கூறினார்.

## புளி பதப்படுத்தும் தொழிலுக்கு ரூ.52 லட்சம் நிதி ஒதுக்கீடு



மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் புளிபதப்படுத்தும் தொழிலுக்கு ரூ.52 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

வறுமைஒழிப்பு

ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா புதுவாழ்வு திட்டத்தை தொடங்கி வைத்து உள்ளார். இந்த திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்கள் அதிக வருமானம் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில் பல்வேறு புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இதன்படி தர்மபுரி மாவட்டத்தில்

ஏழை, எளிய மக்களின் வறுமை ஒழிப்புக்காக நல்லம்பள்ளி பென்னாகரம், பாலக்கோடு, மொரப்பூர், அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 193 கிராம ஊராட்சிகளில் 222 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் பென்னாகரம் ஒன்றியம் ஆச்சாரஅள்ளி கிராமத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் புளி பதப்படுத்தும் தொழில் செய்ய ரூ.52 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.18 லட்சம் நிதியும் வழங்கப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தில் 600 பேர் உறுப்பினர்களாக பங்கேற்று தரமான புளியை வாங்கி அதை பதப்படுத்தி பல்வேறு எடைப்பிரிவுகளில் பேக் செய்து விற்பனைசெய்துவருகிறார்கள்.

ஒகேனக்கல்புளி

இந்த புளி வகைக்கு ஒகேனக்கல் புளி என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. தர்மபுரி மாவட்டம் மட்டுமின்றி மற்ற மாவட்டங்களில் உள்ள நகரங்கள், விழாக்கால கண்காட்சி அரங்குகள் ஆகியவற்றில் இந்த பதப்படுத்தப்பட்ட புளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது இந்த கூட்டமைப்புக்கு உணவு கட்டுப்பாட்டு தரச்சான்றிதழும் கிடைத்து உள்ளது. இதற்காக அந்த கூட்டமைப்புக்கு கலெக்டர் பாராட்டு தெரிவித்தார்.

இதேபோன்று தர்மபுரி மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் உள்ள பொதுமக்கள் கூட்டமைப்பாக சேர்ந்து புதிய தொழில் தொடங்க முன்வர வேண்டும். அந்தபகுதியில் உள்ள உற்பத்தி பொருட்களை மூலபொருளாக பயன்படுத்தி தொழில் தொடங்கி தங்கள் வருமானத்தை பெருக்கி கொள்ள வேண்டும். இவ்வாறு தொழில் தொடங்குபவர்களுக்கு புதுவாழ்வு திட்டத்தின் கீழ் நிதியுதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்து உள்ளார்.

**நாகர்கோவிலில் வேளாண்மை இடுபொருள் விற்பனையாளர்களுக்கு பட்டய படிப்பு பயிற்சி**



வேளாண்மையில் பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு படித்திருந்தால் மட்டுமே வேளாண்மை இடுபொருட்கள் விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்படும் என மத்திய அரசு சட்டம் கொண்டு வந்துள்ளது. இதைத்தொடர்ந்து தற்போது உரம் மற்றும் பூச்சிமருந்து உள்ளிட்ட வேளாண்மை இடுபொருட்கள் விற்பனை செய்யும் விற்பனையாளர்களில் வேளாண்மை பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு படிக்காதவர்களுக்கு ஒரு ஆண்டு கால பட்டயப்படிப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. குமரி மாவட்ட விற்பனையாளர்களுக்கான இந்த பட்டயப்படிப்பு பயிற்சி நாகர்கோவில் ஒழுகினசேரியில் உள்ள வேளாண்மை துணை இயக்குனர் அலுவலகத்தில் நேற்று தொடங்கியது.

பயிற்சியை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தொடங்கி வைத்து, இடுபொருட்கள் விற்பனை செய்வதற்கு பட்டயப்படிப்பு எவ்வாறு அவசியமாகிறது என்பது குறித்தும், மத்திய அரசின் புதிய சட்டம் குறித்தும் விளக்கி பேசினார். மதுரையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற வேளாண்மை இணை இயக்குனர் பெரியசாமி பயிற்சி

அளித்தார். இந்த பயிற்சி வாரத்தில் ஒரு நாள் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை குமரி மாவட்ட வேளாண் இடுபொருள் வியாபாரிகள் சங்க

**மசினகுடி பகுதியில் 'பேர்டோ பெரஸ்' மலர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



மசினகுடி,

மசினகுடி பகுதியில் 'பேர்டோ பெரஸ்' மலர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதில் லாபம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

<u>மலர் சாகுபடி</u>

நீலகிரி மாவட்டம் மசினகுடி பகுதி மக்கள், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு தொழிலை செய்து வருகின்றனர். குறிப்பாக உருளை கிழங்கு, பீன்ஸ், பூண்டு, பஜ்ஜி மிளகாய், வாழை, மஞ்சள், இஞ்சி உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்து வருகின்றனர். காய்கறி விவசாயத்துக்கு ஏற்ற காலநிலை இந்த பகுதியில் உள்ளதால் தற்போது விளைச்சல் நன்றாக இருக்கிறது.

இருப்பினும் மசினகுடி, மாவனல்லா, வாழைத்தோட்டம் போன்ற பகுதிகளில் உள்ள ஒரு சில விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக மலர் சாகுபடியிலும் ஈடுபட்டு வருகின்றனர். தொடக்க காலத்தில் செண்டு மல்லியை மட்டும் நடவு செய்து இருந்தனர். ஆனால் தற்போது அலங்கார மேடைகளில் வைக்கப்படம் மலர்கள் மற்றும் பூங்கொத்துகளில் இருக்கும் 'பேர்டோ பெரஸ்' மலர்களை சாகுபடி செய்ய தொடங்கி உள்ளனர்.

<u>ஒரு பூவின் விலை ரூ.20</u>

மசினகுடி பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில் இந்த மலர் செடிகள் நடப்பட்டு உள்ளன. இந்த மலர்கள் பெங்களுருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு பூவின் விலை ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. அது மட்டுமின்றி ஊட்டியில் உள்ள சில வியாபாரிகள் இந்த 'பேர்டோ பெரஸ்' மலர்களை வாங்கி ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

<u>லாபம் கிடைக்கிறது</u>

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

'பேர்டோ பெரஸ்' மலர் சாகுபடி செய்ய மசினகுடி பகுதி ஏற்றதாக உள்ளது. இதனால் செடிகள் நன்றாக பூக்கின்றன. இந்த பேர்டோ பெரஸ் நாற்றுகள் நடவு செய்த ஒரு வருடத்தில் பூக்க தொடங்குகிறது. செடிகளை நன்றாக பராமரித்தால் குறைந்தது 10 ஆண்டுகள் வரை மலர்களை சாகுபடி செய்ய முடியும். சொட்டு நீர் பாசனம் முறையை பயன்படுத்துவதால் மலர் சாகுபடி தொழில் நன்றாக உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**வைகை அணையை தூர்வாரும் பணி குறித்து விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் முதன்மை தலைமை பொறியாளர் முன்னிலையில் நடந்தது**



ஆண்டிப்பட்டி,

வைகை அணையை தூர்வாரும் பணி குறித்து விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் முதன்மை தலைமை பொறியாளர் முன்னிலையில் நடந்தது.

ஆலோசனை கூட்டம்

தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணை தேனி, திண்டுக்கல், சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் விவசாயத்திற்கும், குடிநீர் தேவைக்கும் நீர்ஆதாரமாக விளங்கி வருகிறது. இதன் மூலம் 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும் தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு குடிநீர் வினியோகமும் இதன் மூலம் நடந்து வருகிறது.

கடந்த 1958–ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட வைகை அணையில் 6 ஆயிரத்து 91 மில்லியன் கனஅடி தண்ணீரை தேக்கி வைக்க முடியும். அணையின் மொத்த நீர்மட்டம் 71 அடியாகும்.

<u>தூர்வார கோரிக்கை</u>

இந்த நிலையில் கடந்த 57 ஆண்டுகளாக வைகை அணை ஒருமுறை கூட தூர்வாரப்படவில்லை. இதனால் நீர்த்தேக்கத்தில் 20 அடிவரை வண்டல்மண் உள்ளது. இதனால் முழுமையான நீர்இருப்பை தேக்க முடியாத நிலையே இருந்தது. இதனால் கடந்த 20 ஆண்டுகளாக வைகை அணையின் நீரினை பயன்படுத்தும் விவசாயிகள் அணையை தூர்வார வேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையொட்டி தமிழக அரசின் உத்தரவுப்படி வைகை அணையை தூர்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அணையின் நீர்இருப்பையும், வண்டல் மண்ணின் அளவையும் துல்லியமாக கணக்கிட தொழில்நுட்ப வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக அணையில் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தனர்.

<u>கருத்து கேட்பு கூட்டம்</u>

இதன் அடிப்படையில் தற்போது அணையை தூர்வாருதல் தொடர்பாக தமிழக அரசின் தலைமை பொறியாளர் திருமாறன் முன்னிலையில் இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்திற்கு மத்திய அரசு நிறுவனமான வாப்கோஸ் அமைப்பின் 8 பேர் அடங்கிய வல்லுனர் குழு ஏற்பாடு செய்து இருந்தது. இந்த கூட்டத்தில் 52 கிராமங்களை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

கூட்டத்தில் முதன்மை தலைமை பொறியாளர் திருமாறன் கூறியதாவது:–

<u>கணக்கீட்டு பணிகள்</u>

தமிழ்நாட்டில் உள்ள வைகை அணை, பேச்சிப்பாறை, மேட்டூர், ஸ்ரீவைகுண்டம், அமராவதி ஆகிய 5 அணைகளை தூர்வாருவதற்கு தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதையொட்டி விவசாயிகளிடம் கருத்து கேட்கப்பட்டுள்ளது. விவசாயிகள் விடுத்த கோரிக்கைகள் அனைத்தும் தமிழக முதல்–அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டு அணையை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசு சார்பில் வந்துள்ள வாப்கோஸ் நிறுவனத்தினர் இந்த கணக்கீட்டு பணிகளை மேற்கொள்வார்கள். வருகிற 8–ந் தேதிக்குள்

விவசாயிகள் தங்களுக்கு தேவையான வண்டல் மண் குறித்த கணக்கை பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு அவர் கூறினார். கூட்டத்தில் மதுரை மண்டல தலைமை பொறியாளர் வள்ளியப்பன், கண்காணிப்பு பொறியாளர் முருகு சுப்பிரமணியம், செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி செயற்பொறியாளர் அன்புச்செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விளையும் கருப்பு திராட்சை கொள்முதல் விலை குறைந்தது



உத்தமபாளையம்,

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விளையும் கருப்பு திராட்சைக்கான கொள்முதல் விலை குறைந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

<u>கருப்பு திராட்சை</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக கருப்பு பன்னீர்திராட்சை அதிக அளவில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பகுதியில்

உள்ள காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, க.புதுப்பட்டி, அணைப்பட்டி, அனுமந்தன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பபரப்பில் கருப்பு திராட்சை விவசாயம் நடைபெறுகிறது.

மேலும், இந்த பகுதிகளில் இருந்து ஆண்டு முழுவதும் வியாபாரிகள் கருப்பு திராட்சையை கொள்முதல் செய்து பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வருகின்றனர். கடந்த ஆண்டு கோடை காலத்தில் இந்த திராட்சை கிலோ ரூ.45 முதல் 50 வரை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது.

<u>விவசாயிகள் கவலை</u>

இவற்றுக்கு மருத்துவகுணம் உண்டு என்பதால், கேரள மாநிலத்திற்கும், சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களுக்கும் அதிக அளவில் அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். இதற்கிடையே தற்போது மராட்டிய மாநிலத்தில் இருந்து அதிக அளவில் விதையில்லா திராட்சை பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்கு வருகிறது.

இதனால் கம்பம் பகுதிகளில் உற்பத்தியாகும் கருப்பு பன்னீர் திராட்சைக்கு போதிய விலை கிடைக்காத நிலை உருவாகி உள்ளது. இதன்படி தற்போது வியாபாரிகள் இங்கு ஒரு கிலோ திராட்சை பழங்களை ரூ.14 மட்டுமே கொடுத்து கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து திராட்சை விவசாயிகள் கூறியதாவது:–

<u>விதையில்லா திராட்சை</u>

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் அதிக அளவில் திராட்சை விளைச்சல் அடைந்துள்ளது. ஆனால் வியாபாரிகள் அவற்றை கொள்முதல் செய்வதில் ஆர்வமின்றி உள்ளனர். இதுகுறித்து கேட்ட போது விதையில்லா திராட்சையை பொதுமக்கள் விரும்பி வாங்குவதால்,

இதனை விற்பனை செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளதாக கூறுகின்றனர். இதன் காரணமாக எங்களிடம் இருந்து மிகவும் குறைவான விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். இதனால் நாங்கள் செலவு செய்த தொகையாவது திரும்ப கிடைக்குமா? என்று தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் மாநில திட்ட குழு துணை தலைவர் தகவல்



விஸ்வநாதபுரத்தில் நடந்த வயல்தின விழாவில் பயனாளி ஒருவருக்கு குதிரை வாலி விதைகளை மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலா நாயர் வழங்கியபோது எடுத்தபடம்.

திருவாரூர் மாவட்டத்தில் சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலாநாயர்கூறினார்.

சிறுதானியபயிர்கள்

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்புக்கூட்டல் தொடர்பான திட்டத்தினை விளக்கும் விதமாக வயல் தினவிழா நடந்தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். இதில் மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலா நாயர் கலந்து கொண்டு பேசினார்.

அப்போதுஅவர்பேசியதாவது:-

அதிகலாபம்

மாநில திட்டக்குழுவின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியில் இருந்து சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்புக்கூட்டல் தொடர்பான திட்டத்தினை திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி வட்டாரத்தில் செயல்படுத்திட ரூ.16 லட்சத்து 15 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் குதிரைவாலி சிறுதானியத்தினை உற்பத்தி செய்வதற்கு 20 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 20 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக 12 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

குதிரை வாலியானது வறட்சியை தாங்கி வளரும் பயிராகும். இதனை உற்பத்தி செய்வதற்கு குறைவான தண்ணீரே போதுமானதாகும் அதே நேரத்தில் தண்ணீர் தேங்கியிருந்தாலும் விளைச்சல் பாதிப்படையாமல் வளரும் பயிராகும். எனவே சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிகலாபம்பெறலாம்.

முக்கியமாக பெண்கள் விவசாயத்தில் முழுமையாக ஈடுபட வேண்டும். ஆகவே விவசாயிகள் நெல் மட்டும் என்பதை மாற்றி சிறு தானியங்களையும் பயிர் செய்து பயன்பெற வேண்டும். சிறுதானியங்களை உணவில் சேர்ப்பதால் பள்ளி குழந்தைகளின் அறிவு திறன் வளர்ச்சி அடையும். இவ்வாறு அவர் கூறினார்.

குறுந்தகடுகள்

அதனை தொடர்ந்து வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைதுறை மூலம் வெளியிடப்பட்ட சிறுதானிய உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் குழந்தைகளிடையே சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை பிரபலப்படுத்துதல் தொடர்பான குறுந்தகடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இதில் மாநில வேளாண்மை

திட்டக்குழு தலைவர் ஜெகன்மோகன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன், திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், வேளாண்மை துணை இயக்குனர் மதியழகன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பெரியகருப்பன், வேளாண்மை உதவி இயக்குனா அசோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கம்பரசம்பேட்டை தடுப்பணையில் நபார்டு வங்கி பொது மேலாளர் ஆய்வு



திருச்சி கம்பரசம்பேட்டை தடுப்பணையை நபார்டு வங்கியின் பொது மேலாளர் ரவீந்திரநாத் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தடுப்பணையின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகளை கேட்டறிந்த அவர் பொதுப்பணித்துறை அதிகாரிகளை பாராட்டினார். இந்த ஆய்வின்போது நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் சுரேஷ், அரியாறு பாசன «¢காட்ட செயற்பொறியாளர் செல்வராஜ், ஆற்று பாதுகாப்பு கோட்ட செயற்பொறியாளர் கலைசெல்வன், ஆற்று

பாதுகாப்பு மற்றும் அரியாறு உட்கோட்ட உதவி செயற்பொறியாளர்கள் இளங்கோவன், முருகேசன், முக்கொம்பு உதவி பொறியாளர் ராஜரெத்தினம், தரக்கட்டுப்பாட்டு பிரிவு உதவி பொறியாளர் சந்திரபிரசாத், மற்றும் முக்கொம்பு பொதுப்பணித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.